<u>4வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை- 600 104.</u>

நாள்.08.01.2026
எம்.சி.ஓ.பி எண். 3683/2021
ம.சா. 2
பெயர். சுதாமதி
க/பெ.திரு. வெங்கடேஷன்
வயது. 50

**<u>முதல் விசாரணை</u>**

நான் நீதிமன்றத்தில் கிடைக்க பெற்ற சம்மனின் பெயரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சியம் அளிப்பதற்காக எனக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதம் ம.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அடையான அட்டை ம.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுரேஷ் என்ற நபர் எங்களுடைய மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். சிகிச்சையில் இருந்த போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையில் வழங்கப்பட்ட இறப்பு சான்று ம.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது சிகிச்சை செலவாகன ரூ.18,42,623/- செலவானது. அதை ரொக்கமாக தான் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் ம.சா.ஆ. 14 மற்றும் ம.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி தொகை காப்பீடு மூலமாக செலுத்தப்பட்டதா என்றால் அதை ரொக்கமாக தான் செலுத்தப்பட்டது.

**<u>1ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1ம் எதிர்மனுதாரர் மற்றும் வழக்கறிஞர் ஆஜர் இல்லாத காரணத்தினால். 1ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**<u>2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணமானது எங்கள் மருத்துவமனையின் நகல் ஆவணம் என்றால் சரிதான். அசல் ஆவணங்கள் அனைத்தும் சிகிச்சை பெற்ற நபரிடமோ அல்லது அவர் சார்ந்து நபரிடம் வழங்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையில் MR departmentயில் நான் 10 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். பொதுவாக காப்பீடு நிறுவனத்திடம் தான் அசல் ஆவணங்கள் வழங்கப்படும் என்றால் சரிதான். அசல் ஆவணத்தை சிகிச்சை பெற்ற நபரிடம் வழங்கிய பிறகு அவர்கள் வேறு காப்பீடு நிறுவனத்திடம் பணம் பெற்றார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் அந்த விவரங்கள் எங்களுக்கு தெரியவராது.
மறுவிசாரணை இல்லை.

X

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

ARUNDHADHI MAGESH

Digitally signed by ARUNDHADHI MAGESH